<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>
<u>**MCOP. No. 251/2019**</u>

எ.ம.சா.1 தேதி. 15.04.2026.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | S.ராஜாராம் | த/பெ, | சுந்தரமூர்த்தி |
| வயது | 50 | தொழில் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை கிடைக்கப்பெற்று அதன் அடிப்படையில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். அழைப்பாணையில் திருக்கடையூர் அபிராமி ே◌ஹாட்டல் அருகே விபத்து நடந்ததாக என் மீது பதியப்பட்ட CC 145/2020 என்ற வழக்கில் நான் விடுவிக்கப்பட்டது சம்பந்தமாகவும், மேற்படி சம்பவம் குறித்து சாட்சியம் சொல்லவும், மேற்படி CC 145/2020 தீர்ப்பு நகல் மற்றும் அந்த சம்பவம் சம்பந்தமான CCTV பதிவினை எடுத்து வந்து சாட்சியம் சொல்ல அழைப்பாணை அனுப்பி அதனை நான் பெற்றுக்கொண்டு வந்துள்ளேன். எனது தரப்பு ஆவணமாக தரங்கம்பாடி, மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் 145/2020ன் 26.03.2024 தேதியிட்ட தீர்ப்புரை ஆகும் அது **எ.ம.சா.ஆ.**1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் எனது அதிவேகமும், கவனக்குறைவும் விபத்துக்கு காரணம் இல்லை என்பதும். இந்த விபத்தில் இறந்த நபரின் கவனக்குறைவும் தான் காரணம் என்பதும் எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக நீதிமன்றம் முடிவுசெய்கிறது என்ற குறிப்பு உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி சம்பவம் CRM Watter Sertive கடைக்கு எதிரே நடைபெற்றுள்ளது. அந்த கடையில் உள்ள CCTV கேமராவில் சம்பவம் பதிவாகி இருந்தது. அந்த சம்பவத்தின் குறுந்தகடு தான் குற்ற வழக்கு என் தரப்பு ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த CCTV கேமராவின் பதிவின் குறுந்தகடினை தற்போது தாக்கல் செய்கிறேன். அது (மனுதாரர் தரப்பு ஆட்சேபனைக்குட்பட்டு) **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் சம்பவத்தின்போது 1ம் எதிர்மனுதாரரின் வாகனமான டிப்பர் லாரியினை சிதம்பரத்திலிருந்து காரைக்கால் நோக்கி சென்றுகொண்டிருந்தேன். அப்போது இறந்துபோன தனபால் ரோட்டின் இடது புறம் மண் பகுதியில் நின்றுகொண்டிருந்தவர் திடீரென்று லாரி வருவதை கவனித்துக்கொண்டே ஓடி வந்து முன்பக்க டயர் அருகில் அமர்ந்தவாறு விழுந்து லாரியின் முன்சக்கரம் ஏறி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இந்த விபத்து சம்பந்தமாக குற்ற வழக்கில் மேற்படி வழக்கில் நான் விபத்தினை ஏற்படுத்த வில்லை, இறந்துபோன நபர் தான் குறுக்கே வந்து தனக்குதானே தனக்கே தெரிந்த காரணத்தினால் வாகனத்தின் முன் அமர்ந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டார் என்ற கட்சியினை நடத்தி விடுதலை பெற்று விட்டேன். இந்த விபத்து சம்பந்தமாக எனது லாரி வேறு எந்த வாகனத்திலோ, நபர்கள்

மீதோ மோதவில்லை. மேற்படி ஆண்டு பட்டிகை எண் 145/2020 நான் விடுதலை பெற்ற பிறகு அரசின் சார்பாக மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை எனக்கு எந்தவித சம்மனும் வரவில்லை. மேற்படி சம்பவத்திற்கு ளனது கவனக்குறைவு காரணம் இல்லை, எனது வாகனம் வருவதை பார்த்துவிட்டு இறந்துபோன நபர் அவரே வாகனத்தின் முன்பு வந்து விழுந்த காரணத்தினால் நான் லாரியினை வலதுபுறம் இழுத்தபோதிலும் அவர் முன் சக்கரத்திற்கு முன்பு உட்கார்ந்து உயிரை மாய்த்துக்கொண்டார். அவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்.

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:–**

முதல் தகவல் அறிக்கையில் நான் தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும். ஹாரன் அடிக்காமலும் டிப்பர் லாரியை ஓட்டி வந்ததாக கூறியுள்ளனர் என்றால் லாரி அருகாமையில் வந்தவுடன் எதிர் திசையில் கார் வந்துகொண்டிருந்தது இரண்டையும் பார்த்துவிட்டு அவர் திடீரென்று லாரியின் முன்பு டயர் அருகே வந்து உட்கார்ந்து விபத்தை ஏற்படுத்திக்கொண்டார். எனது முதல் விசாரணையில் இரண்டு பக்கமும் பார்க்காமல் ஓடி வந்து வண்டியின் முன்பு அமர்ந்துவிட்டார் என்று கூறினேன் என்றால், தற்போது குறுக்கு விசாரணையில் இரண்டு பக்கமும் பார்த்துவிட்டு குறுக்கே வந்தார் என்று கூறுகிறேன் என்றால் இருதிசையிலும் வந்த வாகனத்தை பார்த்துவிட்டுதான் வந்தார். விபத்தில் இறந்துபோன தனபால் தன்னிச்சையாக வந்து லாரியின் முன்பு உட்கார்ந்தது சம்பந்தமாக நான் தனிப்பட்ட முறையில் புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை, போலீசார் விசாரணையில் சம்பவத்தை பற்றி கூறியுள்ளேன்.விபத்து நான் தான் காரணம் என்பதாலும், கவனக்குறைவாலும், பதற்றத்தாலும் விபத்துக்கு பிறகு லாரியினை நடுரோட்டிலேயே விட்டுவிட்டு விபத்தில் இறந்துபோன நபருக்கு முதலுதவி செய்யாமல் ஓடிவிட்டேன் என்றால் விபத்து நடந்தவுடன் நான் இறங்கி பார்த்தபோது சம்பவ இடத்திலேயே தனபால் இறந்துவிட்டார். பொதுமக்கள் லாரியின் கண்ணாடியினை உடைத்தாலும் பொது மக்கள் என்னை சூழ்ந்து கொண்டதாலும் நான் சம்பவ இடத்திலிருந்து தப்பித்து காவல் நிலையத்திற்கு சென்று சம்பவம் பற்றி கூறினேன்.

காவல் நிலையம் நான் தன்னிச்சையாக நான் சென்றேனா என்றால் சென்றேன். அவர்கள் என்னை நீதிமன்றத்தில் சரணடையும்படி கூறினார்கள். நான் சம்பவம் பற்றி இறந்துபோன நபர் குறுக்கே வந்து அமர்ந்து விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்று கூறிய பிறகும் முதல் தகவல் அறிக்கையில் ஓட்டுநரின் அதிவேகத்தாலும். அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் இந்த விபத்து ஏற்பட்டது என்று முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்டுள்ளது. விபத்து நடந்த அன்றைய தினமே காவல் துறையினர் மேற்படி வாகனத்தினை காவல் நிலையத்திற்கு அவர்களே எடுத்துச்சென்றுவிட்டனர். விபத்து சமயத்தில் நான் ஹாரன் அடிக்காமல் அதிவேகமாக வந்தது தான் மேற்படி விபத்துக்கு காரணம் என்றால் இல்லை நான் எந்த வகையிலும் விபத்துக்கு காரணம் இல்லை. விபத்தில் இறந்துபோன தனபால் ரோட்டினை

கடக்கும்போது விபத்திலிருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ள லாரியின் முன்பு உட்கார்த்து விட்டார் என்றால் வாகனத்தை நிறுத்த முடியாக துாரத்தில் வந்த பிறகு ரோட்டின் மையப்பகுதிக்கு வந்ததால் என்னால் வாகனத்தை முடிந்த வரை வலது பக்கம் வளைத்த பிறகும் அவர் மீது மோதுவதை தவிர்க்க முடியவில்லை. நீங்கள் அதிவேகமாக வந்ததால் தான் தங்களால் பிரேக் அடித்து வாகனத்தை நிறுத்த முடியவில்லை என்றால் அருகாமையில் வந்து திடீரென்று வந்ததால் வாகனத்தை நிறுத்த இயலாது.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு மறுவிசாரணை</u>:–

சம்பவம் நடந்த இடத்தில் ரோட்டினை பாதைசாரிகள் கடப்பதற்கு உகந்த பகுதி அல்ல. அங்கே சாலையை கடக்க எந்தவித ஏற்பாடும் போக்குவரத்து காவல் துறையால் செய்து வைக்கப்பட்ட பகுதி அல்ல. விபத்து நடந்த இடத்திற்கு முன்பாக 50 அடி வரை வேகத்தடை எதுவும் இல்லை. போக்குவரத்து காவல் துறை எந்தவகையான ஒலி விளக்குகளும் அந்த பகுதியில் கிடையாது. அது நெடுஞ்சாலையாகும்.

<u>மனுதாரர் தரப்பு மறுவிசாரணை</u>:–

சம்பவம் நடந்த இடம் கிராம வாசிகள் அதிகம் வசிக்கும் இடம் என்பதால் அங்கு வேகத்தடை மற்றும் பேரிகார்டு இருக்கும். தாங்கள் வழக்கிற்காக இல்லை என்று சொல்லுகிறீர்கள் என்றால் தற்சமயம் வரை அந்த இடத்தில் அவ்வாறு இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.